**கவனிக்க** .- 2015.01.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1897 - 2015 ජනවාරි මස 09 වැනි සිකුරාදා - 2015.01.09

1897 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 46 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 44 | ஏல விற்பனைகள் | 47 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, சனவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம் - கல்முனை**

நீதிமன்ற சான்றுப் பொருட்கள் ஏல விற்பனை

கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும், உரிமை கோரப்படாததுமான கீழ்க்காணும் பொருட்கள் எதிர்வரும் 2015.01.17 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு இந்நீதிமன்ற வளவில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப்பொருட்களுக்கான உரிமை கோருபவர்கள் எவரும் இருந்தால் ஏலவிற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

2. பொது மக்கள் எவரும் இந்நீதிமன்ற பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

3. இப்பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப்பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு.

4. பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.

5. சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. பொருட்களை ஏலத்தில் வாங்குவோர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய ஆளடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

ஏ. ஜூட்சன்,
நீதிவான் நீதிமன்றம்,
கல்முனை.

**ஏல விற்பனைக்கான வாகனங்களின் விபரம்**

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பொருள் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | AR/2610 | அடிச்சட்ட இலக்கம் - 00AIUF07640<br>இயந்திர இலக்கம் - 00AIOE16456<br>159-9794 - ஹீரோ ஹொண்டா<br>மோட்டார் சைக்கிள் | 1 |
| 2 | AR/2678 | அடிச்சட்ட இலக்கம் - 00A19C09340<br>இயந்திர இலக்கம் - அழிந்துள்ளது<br>160-2423 - ஹீரோ ஹொண்டா<br>மோட்டார் சைக்கிள் | 1 |
| 3 | 64656 | அடிச்சட்ட இலக்கம் - 02G26F09189<br>இயந்திர இலக்கம் - 2GF25E10735<br>WP.GT-3959 - ஹீரோ ஹொண்டா<br>மோட்டார் சைக்கிள் | 1 |
| 4 | B/4452 | தெளிவில்லை - MD2DDDUZZZNWG 86169<br>இயந்திர இலக்கம் - DUMBNG72091<br>பஜாஜ் CT100 -<br>மோட்டார் சைக்கிள் | 1 |
| 5 | 57622 | அடிச்சட்ட இலக்கம் - அழிந்துள்ளது<br>இயந்திர இலக்கம் - 04C47M00049<br>EP.JA4905 - ஹீரோ ஹொண்டா CBZ-<br>மோட்டார் சைக்கிள் | 1 |

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பொருள் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 6 | 60555 | அடிச்சட்ட இலக்கம் - தெளிவில்லை<br>இயந்திர இலக்கம் - CE22488U586694F<br>36-8051 - உழவு இயந்திரம் | 1 |
| 7 | 60555 | அடிச்சட்ட இலக்கம் - தெளிவில்லை<br>உழவு இயந்திரப் பெட்டி | 1 |

**ஏல விற்பனைக்கான ஆடைகளின் விபரம்**

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பொருள் விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | 78907 | சல்வார்கள் | 7 |
| | | சல்வார்கள் | 3 |
| | | சல்வார்கள் | 3 |
| | | சாறிகள் | 5 |
| | | சாறிகள் | 14 |
| | | சாறிகள் | 10 |
| | | சாறிகள் | 6 |
| | | | 48 |
| 2 | 78908 | சல்வார்கள் | 5 |
| | | சாறிகள் | 18 |
| | | ஜீன்ஸ் (பெண்) | 16 |
| | | பிளவுஸ் (பெண்) | 60 |
| | | | 99 |
| 3 | 78909 | சாறிகள் | 50 |
| | | சாறிகள் | 50 |
| | | சல்வார்கள் | 56 |
| | | சிறுவர் உடுப்புக்கள் | 8 |
| | | சாறிகள் | 9 |
| | | சாறிகள் | 7 |
| | | | 180 |
| 4 | 79177 | சாறிகள் | 35 |
| | | சாறிகள் | 19 |
| | | சாறிகள் | 11 |
| | | சல்வார்கள் | 26 |
| | | சல்வார்கள் | 27 |
| | | | 118 |
| 5 | 79218 | சிறுவர் உடுப்புக்கள் | 37 |
| | | பெனியன் (ஆண்கள்) | 4 |
| | | சல்வார்கள் | 2 |
| | | ஜீன்ஸ் (பெண்) | 6 |
| | | மேற்சட்டை (பெண்) | 10 |
| | | | 59 |
| | | | 504 |

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

1. கம்பனிப் பெயர் : எஸ் அன்ட் எஸ் பெப்றிகேட்டர்ஸ் (பீவீரீ) எல்ரீடி
   பதிவு இலக்கம் : பீவீ 102325
   பதிவு முகவரி : இல. 31, 4 ஆம் ஒழுங்கை, ஜோர்ஜ் ஈ டி சில்வா மாவத்தை, கண்டி
   பதிவுத் திகதி : 2014.11.21

2. கம்பனிப் பெயர் : ஆர். சீ. அமரசேகர அலு. கிராப்ட் என்ஜினியர்ஸ் (பீவீரீ) எல்ரீடி
   பதிவு இலக்கம் : பீவீ 102324
   பதிவு முகவரி : இல. 50/9, மெத போவள, கண்டி
   பதிவுத் திகதி : 2014.11.24

ஆர். கே. எல். எஸ். கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பீவீரீ),
கம்பனிச் செயலாளர்.

இல. 623/25ஏ, ராஜகிரிய கார்டன்ஸ்,
ராஜகிரிய.

1-299

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

1. கம்பனிப் பெயர் : எஸ் அன்ட் எஸ் பெப்றிகேட்டர்ஸ் (பீவீரீ) எல்ரீடி
   பதிவு இலக்கம் : பீவீ 102325
   பதிவு முகவரி : இல. 31, 4 ஆம் ஒழுங்கை, ஜோர்ஜ் ஈ டி சில்வா மாவத்தை, கண்டி
   பதிவுத் திகதி : 2014.11.21

2. கம்பனிப் பெயர் : ஆர். சீ. அமரசேகர அலு. கிராப்ட் என்ஜினியர்ஸ் (பீவீரீ) எல்ரீடி
   பதிவு இலக்கம் : பீவீ 102324
   பதிவு முகவரி : இல. 50/9, மெத போவன, கண்டி
   பதிவுத் திகதி : 2014.11.24

ஆர். கே. எல். எஸ். கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பீவீரீ),
கம்பனிச் செயலாளர்.

இல. 623/25ஏ, ராஜகிரிய கார்டன்ஸ்,
ராஜகிரிய.

1-300

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியாக மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : வீ திரீ எனர்ஜி சொலூஷன்ஸ் (பீவீரீ) எல்ரீடி
பதிவு இலக்கம் : பீவீ 101991
பதிவுத் திகதி : 2014, நவெம்பர் 7
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 16ஏ-1/1, யசோதரா மாவத்தை, ஸ்ரீ சரணங்கர வீதி, தெஹிவளை

சட்டத்தரணி (திருமதி) எஸ். இராஜகுலேந்திரா,
கம்பனிச் செயலாளர்.

இல. 34/1, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,
கொழும்பு 6.

1-275

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 387/சீ, இந்திகஸ்லந்த, வெலிகெடிய, பமுனுகம எனும் விலாசத்தில் வதியும் உடுகம கோறலலாகே சுமுது பெரேரா (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 817743110V) ஆகிய என்னால் இல. 387/சீ, இந்திகஸ்லந்த, வெலிகெடிய, பமுனுகமவைச் சேர்ந்த உடுகம கோறலலாகே சந்துன் பெரேரா (தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் 860150018V) என்பவரை எனது சார்பில் கருமமாற்றும் பொருட்டு வழங்கப்பட்ட நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கென்சியச் அமரதுங்க அவர்களால் 2008.12.22 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப் பட்ட 35 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப் படுகின்றதென்பதையும் இதன் பின்னர் அந்த அற்றோணித் தத்துவத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உடுகம கோறலலாகே சுமுது பெரேரா.

1-220

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பியோலின் இன்டர்நஷனல் ட்றேடிங் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி பதிவிலக்கம் : பீவீ 102129
கூட்டிணைப்புத் திகதி : 2014.11.13
பதிவு முகவரி : இல. எப்71, அதுல மாவத்தை, கல்கிஸ்ஸ

*கம்பனியின் பெயர்* : மை சொய்ஸ் கேட்டரிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 71718
*கூட்டிணைப்புத் திகதி* : 2010.03.26
*பதிவு முகவரி* : இல. 6, ஜனரத்ன மாவத்தை, கம்பஹா

ஆர். கே. எல். எஸ். கோர்ப்பரேட்
சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்.

1-271

---

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

வத்தளை-ஹெந்தலை, அவரிவத்த வீதியில் உள்ள தோமஸ் கார்டினல் குரே மாவத்தையில் இலக்கம் 62/3 இல் வசிக்கும் கொம்பன் ஆரச்சிலாகே குமாரி மானெல் பெரேரா ஆகிய நான், கொழும்பு பிரசித்திபெற்ற நொத்தாரிசு எம். சீ. எம். நவாஸ் அவர்களால் 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 1 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வத்தளை-ஹுணுப்பிட்டி, நந்தன மாவத்தையில் இலக்கம் 402 இல் வசிக்கும் கிருஷ்ணசாமி சர்வேஸ்வரன் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட 776 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணி தத்துவம் இரத்துச்செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகின்றேன். மேற்கூறப்பட்ட செல்லுபடியற்ற அற்றோணி அதிகாரத் தின்கீழ் இதன் பின்னர் புரியப்படும் எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும்.

கொம்பன் ஆரச்சிலாகே குமாரி மானெல் பெரேரா.

1-318/1

---

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

களனி, கோனவல, பெலன் கஹஹேனேயில் இல. 702/7ஏ இல் வசிக்கும் கொஹொம்பன் ஆரச்சிகே குமாரி மானெல் பெரேரா ஆகிய நான், கொழும்பு பிரசித்திபெற்ற நொத்தாரிசு கே. பீ. ஜீ. கே. டயஸ் என்பவரால் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு பொரலஸ்கமுவ, மகரகம வீதி, முதலாம் ஒழுங்கையில் உள்ள இல. 35/F1 இல் வசிக்கும் குருவிட்டகே நில்மினீ பிரியந்திகா என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட 794 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணி தத்துவம் இரத்துச்செய்யப்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன். மேற்கூறப்பட்டவரினால் செல்லுபடியற்ற அற்றோணி அதிகாரத்தின்கீழ் இதன் பின்னர் புரியப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை அறியத்தருகிறேன்.

கொஹொம்பன் ஆரச்சிகே குமாரி மானெல் பெரேரா.

1-318/2

---

# ஏல விற்பனைகள்

**செலான் வங்கி பீஎல்சீ - பாணந்துறை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

(''கடன்பட்டோர்'' என்ற வகையில் பாணந்துறையைச் சேர்ந்த டொன் பிரசன்னா விக்கிரமசிங்க மற்றும் டொன் ஷுக்மன் விக்கிரமசிங்க என்பவருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.)

**ஏலவிற்பனை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்திலுள்ள தோட்டமுன-பாணந்துறையில் தல்பிட்டி டெபட்ட, பாணந்துறை வாதுறமுள்ளயில் அமைந்துள்ள ''மூனமல்கஹாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற காணி, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. அம்பேபிட்டிய என்பவரினால் தயாரிக்கப்பட்டு 1984.07.22 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1817 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 3 அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள், மணல் மற்றும் அனைத்துமுடன் ஒரு றூட் நான்கு தசம் எட்டு சைபர் பேர்ச் (0ஏ. 1றூ. 4.80பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன், மேற்கூறப் பட்ட நிலவரைபட இல. 1817 இல் துண்டு 3 தற்பொழுது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஆர். குமாரகே என்பவரினால் தயாரிக்கப்பட்டு 2000.06.08 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1035 இல் மீளளவீடு செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு :

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்திலுள்ள தோட்டமுன-பாணந்துறையில் தல்பிட்டி டெபட்ட, பாணந்துறை-பண்டாரகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வாதுறமுள்ளயில் அமைந்துள்ள ''மூனமல்கஹாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 3 உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஆர். குமாரகே என்பவரினால் தயாரிக்கப்பட்டு 2000.06.08 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1035 இல் ''மூனமல்கஹாவத்த'' என்று அழைக்கப்படுகின்ற அங்கு காணப்படுகின்ற கட்டிடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள், மணல் மற்றும் அனைத்துமுடன் ஒரு றூட் நான்கு தசம் எட்டு சைபர் பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 4.80பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2015, சனவரி 30 ஆந் திகதி பி. ப. 1.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்**.- பாணந்துறை மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து ஹொரணை வீதி மார்க்கமாக சுமார் 2.5 கி. மீ. தொலைவில் உள்ள எலுவில சந்திவரை சென்று பின் இடதுபக்கமாக உள்ள கிரிபெரிய வீதியால் சுமார் 1 கி. மீ. (பின்னவல வீதி மற்றும் புத்தர் சிலையைக் கடந்து செல்லவும்.) பின் வலதுபக்கமாக உள்ள மயான வீதியால் 50 மீற்றர் வரை சென்றால் குறிக்கப்பட்ட சொத்து இடதுகைப் பக்கத்தில் வீதியின் அருகில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2014.11.21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2014.11.15 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''லங்காதீப'' பத்திரிகைகளையும் 2014.10.31 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட

வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா ; (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "சிரேஷ்ட பிரதி முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03'' என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொ.பே. இல. 2456479, 2456481.

துசித கருணாரத்ன (ச.நீ.),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 011-3068185, 2572940.

1-283

---

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம் (பாணந்துறை பதிவுப் பிரிவிற்குள்), பாணந்துறை-தொட்டமுனை, பாணந்துறை தல்பிட்டி தேபெத்த, (பாணந்துறை பிரதேச சபையின் கெசெல்வத்தை உப அலுவலக எல்லைகளுக்குள், பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவினுள், கெசெல்வத்தை கிராம அலுவலர் பிரிவினுள், கெசெல் வத்தை கிராமத்தில் அமைந்துள்ளதும் தொட்டுபல வீதி, திக்கல, வரிமதிப்பு இல. 294/106 ஐக் கொண்டதும் "பெலிதுவ ஐலண்ட்" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டி. ஜீ. வீரசிங்ஹ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1997, ஒற்றோபர் 09 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1309 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 34 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1று. 13.34பே.)**

(கடப்பாடுடையவரான அனிஷ்கா ரன்ஜீவி பொன்சேக்கா டீ சில்வா, பிரசித்த நொத்தாரிசு ஆர். ஆர். எல். சீ. ரணசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2013, யூன் 19 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 371 மற்றும் 2014, மாச்சு 3 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாம் ஈட்டுமுறி இல. 491 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- கொழும்பிலிருந்து பழைய காலி வீதி வழியே கெசெல்வத்தை சந்தி வரை ஏறக்குறைய 22 1/2 கி. மீ. சென்று இடப்பக்கம் திரும்பி திக்கல வீதி வழியே ருக்சின் தீவிற்கான படகுச்சேவை ஆரம்பிக்கும் இடம்வரை ஏறக்குறைய 2 கி. மீ. சென்று மேலும் பொல்கொடை வாவியில் ருக்சின் தீவுவரை படகுச்சேவை உபயோகித்து சென்று ஆதனத்திற்கு இட்டுச்செல்லும் பொது வீதியில் செல்லவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2015, சனவரி 30 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.12.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
4. மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணம் 3,000 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல.450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., முகாமையாளர்-அறவீடுகள்'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2565573, 011-2565565.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர்,
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.182/3 (50/3), விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. 011-3068185, 071-4177199.
தொலைநகல் இல. : 011-2572940.

1-329

**டீஎப்சீசீ வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் பகிரங்க ஏல விற்பனை**

***2051 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

***கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நான்கு கடைச்சந்தி வரைக்குமான உப்புவெளி கிராமத்தில் அமைந்துள்ள, "பானையடி வளவு" என அழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. மஹேந்திரநாதன் அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 834 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2, 3 மற்றும் 4 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகள்-***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 20.63பே.)***

***மேற்குறிப்பிடப்பட்ட "பானையடிவளவு" என அழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. மஹேந்திரநாதன் அவர்களால் வரையப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 834 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2, 3 மற்றும் 4 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டுகள் பின்வருமாறு மீள் அளவை செய்யப்பட்டுள்ளன.***

***கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நான்கு கடைச்சந்தி வரைக்குமான மற்றும் திருகோணமலை பிரதேச சபை எல்லைகளுக்கு உட்பட்ட உப்புவெளி 4 ஆம் வட்டாரம், கிராமசேவகர் பிரிவு 243 இல் உப்புவெளியில் அமைந்துள்ள இல. 24/1 மற்றும் 24/2, தட்டகை வீதி, திருகோணமலை என்ற முகவரியில் அமைந்துள்ள திருகோணமலையைச் சேர்ந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. மஹேந்திரநாதன் அவர்களால் வரையப்பட்ட 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட 834பி ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அதற்குச் சொந்தமான அனைத்து உரித்துக்களும்.***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1றூ. 8.75பே.)***

*(திருகோணமலை பிரசித்த நொத்தாரிசு ரீ. துஷ்யந்தன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட 2051 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் திருகோணமலையில் லஹிரு ஹாட்வெயர் எனும் பெயரில் வியாபாரத்தை நடத்திவரும் செல்லத்துரை சாந்தலிங்கம் அவர்களால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.*

*டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 1,28,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

1-222

---

***சம்பத் வங்கி பீ எல் சீ***

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

கே. எம். வகச்சி - கணக்கு இல. 0074 5000 1303

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2008.01.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.06.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2010.06.02 ஆந் திகதிய "திவயின", "ஐலன்ட்", "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல் களுக்கிணங்க நிலுவை முதலான, பத்தொன்பது இலட்சத்து*

எழுபதினாயிரத்து முந்நூற்றுத்தொண்ணூற்றாறு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 19,70,396.64) 2014.03.11 ஆந் திகதி முதல் பிணை உறுதி இல. 275 இன் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை மூன்று இலட்சத்து நான்காயிரம் ரூபா (ரூ. 3,04,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து வீதம் (17.5%) மேலும் பதினான்கு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எழுபத்துநான்கு ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 14,38,074.69) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) 2013.03.10 ஆந் திகதிக்கு அறவிட்டுக்கொள்வதற்கு 2007, நவெம்பர் 1 ஆந் திகதி முதல் மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை பதினான்கு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நானூற்றுமுப்பத்தொரு ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 14,46,431.45) கட்டணத்திற்கு கழிக்கப்பட்ட பன்னிரண்டு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்துநான்கு ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூ. 12,38,884.82) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் (இங்கு முதலாவது அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்தின் மீள் அறவீடும் உப பிரிவுமான) நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான சொக்மன் அன்ட் சமரவிக்கிரம என்பவர் மூலமாக 2015.01.29 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், வெதிரட்ட கோரலேயின் புத்தள ஹுலந்தாவ கிராமசேவகர் பிரிவின் ஹுலந்தாவையில் அமைந்த கூறப்பட்ட குறித்த உறுதி இல. மொ/பிர 54664 இல் குறிப்பிடப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன– வடக்கு : உக்கு நைதெயின் காணி ; கிழக்கு : விவசாய மத்திய நிலையம் ஒன்றிற்குச் சொந்தமான காணி ; தெற்கு : மாட்டின் சில்வாவிற்குச் சொந்தமான காணி ; மற்றும் மேற்கு : அப்பு நைதெயின் காணி ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் (1ஏ. 0றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட பெரிய காணித்துண்டுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன் கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட குறித்த உறுதி இல. மொ/பிர 54664 எனும் பிரதான உறுதிக்கு அமைவாக மொணராகலை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் எல்டிஓ எல்/40/151 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பி. இலங்கசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, யூன் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. MO/275 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டு மீள் அளவீடு செய்யப்பட்டு தற்போது லொட் 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2 ஆவது அட்டவணை**

1. ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், வெதிரட்ட கோரலேயின் புத்தள ஹுலந்தாவ கிராமசேவகர் பிரிவின் ஹுலந்தாவையில் அமைந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. பி. அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010.08.26 ஆந் திகதியிடப்பட்ட இல. 3600 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு : அப்பு நைதெயின் காணி லொட் 3 மற்றும் 4 ; கிழக்கு : லொட்கள் 1, 3 மற்றும் 4 (12 அடிகள் அகல பிரதேச வழி) ; தெற்கு : மாட்டின் சில்வாவுக்குச் சொந்தமான காணி மற்றும் லொட் 1 ; மற்றும் மேற்கு : மாட்டின் சில்வா மற்றும் அப்பு நைதெயிற்குச் சொந்தமான காணிகள் ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தேழு தசம் நான்கு பேர்ச் (0ஏ. 0றூ. 27.4) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் குறிப்பிடப்பட்ட இல. 3600 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

2. ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், வெதிரட்ட கோரலேயின் புத்தள ஹுலந்தாவ கிராமசேவகர் பிரிவின் ஹுலந்தாவையில் அமைந்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. பி. அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010.08.26 ஆந் திகதியிடப்பட்ட இல. 3600 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன– வடக்கு : லொட் 715 (எப்வீபீ 172 இன் வீதி) உக்கு நைதெ மற்றும் அப்பு நைதெயின் காணிகள் ; கிழக்கு : லொட் 715 (எப்வீபீ 172 இன் வீதி) மற்றும் 4 (12 அடிகள் அகல பிரவேச வழி) ; மற்றும் தெற்கு : லொட் 2 மற்றும் 4 (12 அடிகள் அகல பிரவேச வழி) ; மற்றும் மேற்கு : உக்கு நைதெயிற்கு மற்றும் அப்பு நைதெயிற்குச் சொந்தமான காணிகள் ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த இரண்டு றூட் (0ஏ. 2றூ. 0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் குறிப்பிடப்பட்ட இல. 3600 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-321

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.